DMC CUM JM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 149 /2021, Kunnam P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கருப்பண் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | தங்கமுத்து | Occupation | : | டீ கடை |
| Village | : | வைத்தியநாதபுரம் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 53 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 24.07.2025 | | | | | |

1,5,7,9,10 எதிரிகள் ஆஜர். ,4,6,8 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2,3 எதிரிகள் தனியாக பிரிக்கப்பட்டுள்ளார்கள்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டீ கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். மற்ற எதிரிகளான சேகர், கோவிந்தன், சின்னதுரை ஆகியோரை எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க **சாட்சி பிறழ் சாட்சியாக** கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபட்டார்).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. போலீசார் விசாரணையில் கடந்த 12.09.2019 ம் தேதியில் மதியம் 12.30 மணியளவில் அ.சா.1 உடன் அவருக்கு சொந்தமான நிலத்தை பார்க்கசென்றதாகவும், அப்போது எதிரிகளும் இரண்டு டிராக்டரில் உழவு ஓட்டி கொண்டிருந்தார்கள். அதை தட்டி கேட்ட அ.சா.1 ஐ டிராக்டரை ஏற்றவந்ததாகவும், எதிரிகள் செல்லம்மாள், பெரியசாமி, காசி, கோவிந்தன், சின்னதுரை , கண்ணன், சின்னப்பிள்ளை, ஆகியோர் அ.சா.1 ஐயும் அவரது தந்தையும் கழுத்தை பிடித்து நெறித்து கையாலும் காலாலும் அடித்ததாகவும் கோவிந்தன் கட்டையால் அடிக்கவந்ததாகவும், செல்லம்மாளும் பெரியசாமியும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தாகவும், செல்லம்மாள் இரும்பு கம்பியை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாவும் சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும்

சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCJM COURT, KUNNAM